**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06ஆம் நாள் வியாழக்கிழமை

**IA.No.01/2023 in IA.No.221/2017 in OS.No.30/2017**

**TNTM 03000066/2017**

1.M.D. துரைராஜா

2. பாலசுப்பிரமணி (எ) மணி ... மனுதாரர்/மனுதாரர்/பிரதிவாதிகள்

/எதிராக/

M/S. ஆயிரவைசிய பாரி செட்டியார் சாரிட்டி டிரஸ்ட்
அதன் தலைவர் A.K. ராஜமாணிக்கம் என்பவரால்
எடுத்துரைக்கப்படுகிறது. ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 04.09.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.தாமோதரன்,M.A.B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/ தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பிரபாகரன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இவ்வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை மீண்டும் விசாரணை செய்ய கூடுதல் பிரமாண வாக்குமூலம் மற்றும் ஆவணங்களைத் தாக்கல் செய்து குறியீடு செய்ய மேற்படி இடைக்கால மனுவினை மறு திறப்பு செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/மனுதாரர்/1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் இம்மனுவின் மனுதாரர். மேற்படி மனுவிலும் மனுதாரர் மற்றும் மேற்படி தாவாவில் 1ம் பிரதிவாதி ஆவார். மனுதாரருக்கு மேற்படி வழக்கின் அனைத்துச் சங்கதிகளும் நன்கு தெரியும். மேற்படி அசல் தாவா எண்.30/2017ன் இடைக்கால மனு "To vacate or setaside the Ex–parte Injunction" ஆக I.A.No.221/2017ஆக தாக்கல் செய்துள்ளார். இந்நீதிமன்றத்தில் I.A.No.220/2017ஆக மனுதாரர் தனது சாட்சிய வாக்குமூலமாக 06.10.2017 நாளிட்டு தாக்கல் செய்து Ex.A1 to Ex.A11 ஆக குறியீடு செய்த ஆவணங்கள் மேற்படி I.A.No.221/2017ஆக இடைக்கால மனுவில் மனுதாரர்

தரப்பு கூடுதல் சாட்சியத்தின் வாயிலாகக் குறியீடு செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமாகின்றது. இல்லாவிடில் மனுதாரர் ஈடு செய்ய இயலாத அநேக கஷ்ட நஷ்டங்களுக்கும், சொல்லவொண்ணாத் துயரத்திற்கு ஆளாக நேரிடும்.

2. மேலும் மனுதாரர் கனம் செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் இடைக்கால மனு எண்.359/2015 இல் அ.வ.எண்.120/2015ல் 16.09.2015 அன்று மனுதாரர் பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கலாகி எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.26 வரையிலான சொத்து வரி இரசீதுகளும், எ.சா.ஆ.27 முதல் எ.சா.ஆ.45 வரையிலான நிலவரி இரசீதுகளும், எ.சா.ஆ.46 முதல் எ.சா.ஆ.52 வரையிலான சொத்து வரி இரசீதுகளும், எ.சா.ஆ.53 முதல் எ.சா.ஆ.58 வரையிலான குடிநீர் கட்டண அசல் இரசீதுகளும், எ.சா.ஆ.59 முதல் எ.சா.ஆ.63 வரையிலான மின்கட்டண அசல் இரசீதுகளும், எ.சா.ஆ.64 முதல் எ.சா.ஆ.66 வரை குறியீடு செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலவரி அசல் இரசீதுகளும், எ.சா.ஆ.67 முதல் எ.சா.ஆ.71 வரையிலான சொத்து வரி அசல் இரசீதுகளுடன் கூடிய ஆவணங்களை முறையே மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக R1 to R10 தொடர் ஆவணங்களாக் குறியீடு செய்து ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இடைக்கால மனு எண்.359/2015ல் மனுதாரர் தரப்பில் தாக்கலாகி உள்ள கவுண்டருடன் தாக்கலான ஆவணங்களையும் அந்த ஆவணங்களுடன் தாங்கிய சங்கதிகளும் இந்த இடைக்கால மனு எண்.221/2017ன் ஒரு பகுதியாகப் பாவிக்க வேண்டியது அவசியமும், நியாயமுமாகின்றது. இல்லையேல் மனுதாரர் ஈடு செய்ய முடியாத அநேக கஷ்ட நஷ்டங்களுக்கும் சொல்லவொண்ணாத் துயருக்கும் ஆளாக நேரிடும்.

3. மேலும், இடைக்கால மனு எண்.365/2016 in O.S.120/2015 1. Certified copy of the Judgement in O.S.32/1997 passed by this Honourable Principal District Munsif, Arni. 2. Certified copy of the Decree in A.S.No.28/2005 passed by this Honourable Court ஆகிய இரண்டு ஆவணங்களும் மேற்படி இடைக்கால மனுவின் முக்கிய அங்கமாக அமைந்துள்ளதால் அவைகளை இம்மனுவின் சான்றாவணங்களாகக் குறியீடு செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமாகின்றது. இல்லையேல் மனுதாரர் ஈடு செய்ய முடியாத அநேக கஷ்ட நஷ்டங்களுக்கும் சொல்லவெண்ணாத் துயரத்திற்கும் ஆளாக நேரிடும். மனுதாரர் கனம் செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சங்கதிகளையும், அத்துடன் தாக்கலாகியுள்ள 1 முதல் 4 வரையிலான சான்றிட்ட ஆவணங்களையும் முறையே இம்மனுவின் ஒரு முக்கிய அங்கமாக உள்ளதால் அவைகளை மனுதாரர் தரப்புச் சான்றாவணங்களாகக் குறியீடு செய்ய வேண்டியது அவசியமும், நியாயமும் ஆகின்றது. இல்லையேல் மனுதாரர் ஈடு செய்ய முடியாத அநேக கஷ்ட நஷ்டங்களுக்கும் சொல்லவொண்ணாத் துயரத்திற்கும் ஆளாக நேரிடும்.

4. மனுதாரர் மேற்படி வழக்கின் இடைக்கால மனு எண்.221/2017ல் சம்பந்தப்பட்ட மேற்கண்ட ஆவணங்களாக இந்நீதிமன்றத்தில் அசல் தாவா எண்.30/2017ல் உள்ளதால் அந்த ஆவணங்களை குறியீடு செய்வதற்கும் அந்த ஆவணங்களைக் குறித்து சாட்சியம் அளிக்க வேண்டியிருப்பதால் மேற்படி வழக்கின் இடைக்கால மனுவை மீண்டும் Re-open செய்ய வேண்டும். அவ்வாறு Re-open செய்தால் மட்டுமே அந்த ஆவணங்களைக் குறியீடு செய்ய இயலும். அதனால் மேற்படி வழக்கின் இடைக்கால மனுவை மீண்டும் Re-open செய்ய வேண்டி இந்த மனுவினைக் கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கின்றார். இந்த மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்க வேண்டியது அவசியமும், நியாயமுமாகின்றது. இல்லையேல் மனுதாரர் ஈடு செய்ய முடியாத அநேக கஷ்ட நஷ்டங்களுக்கும் சொல்லவொண்ணாத் துயரத்திற்கும் ஆளாக நேரிடும். அதனால் மனுதாரர் உரிமையும் பாதிக்கப்படும் என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

5. <u>எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:-</u>

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளையும் எதிர்மனுதாரர் மறுக்கிறார். மனுவில் சொல்லியுள்ள விவரங்களை மனுதாரரே நிரூபணம் செய்யவேண்டும். இந்த எதிர்மனுதாரர் வழக்கு சொத்தை 1, 2 மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடமிருந்து சுவாதீனம் மீட்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். 1ம் மனுதாரர், 2ம் மனுதாரரிடமிருந்து சட்ட விரோதமாக வழக்கு சொத்தை வாங்கியிருக்கிறார். எங்கள் Trust-க்கு உரிமையான சொத்தை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார். இருதரப்பிலும், மேற்படி மனுவில் வாதுரை கேட்ட பிறகு அசல் வழக்கை காலம் கடத்தவேண்டி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யும்போது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து எந்த விவரமும் கூறவில்லை. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் எந்த வகையில் மனுவினை ஆதரிக்கும் வகையில் உள்ளது என்ற விவரம் மனுதாரர் தரப்பில் குறிப்பிடவில்லை. இந்த மனுவை அனுமதிக்காமல் போனால் மனுதாரருக்கு என்ன இழப்பீடு ஏற்படும் என்ற விவரம் எதுவும் மனுவில் குறிப்பிடவில்லை.

6. மனுதாரர்/1ம் பிரதிவாதி பல ஆவணங்களை இ.ம.எண்.359/2015 இன் அ.வ.எண்.120/2015 மற்றும் இ.ம.எண்.365/2015 இன் அ.வ.எண்.120/2015 ஆகிய வழக்குகளில் முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாரில் தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து அந்த மனுக்களை தள்ளுபடி செய்துவிட்டது. மனுதாரர் மீண்டும் இந்த மனுவின் மூலம் இந்நீதிமன்றத்தின் நேரத்தை வீனடிக்கும் விதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். 2013ம் ஆண்டில் ஆவண எண்.300/2015 என்ற மோசடியான ஆவணத்தை 1, 2 மனுதாரர்கள் உருவாக்கியுள்ளார்கள். ச.எண்.7 மொத்த விஸ்தீரணம்

1.16 ஏக்கர்ஸ் மற்றும் அதிலுள்ள கட்டிடங்கள் 1838 முதல் ஆயிரவைசிய பாரி செட்டியார் அறக்கட்டளைக்கு சொந்தமாக இருந்து வருகிறது. தற்போது வரை ஆயிரவைசிய பாரி செட்டியார் அறக்கட்டளையின் அனுபவத்தில் இருந்து வருகிறது. வெகு காலத்திற்கு முன்பே ச.எண்.7ல் உள்ள சத்திரம் மற்றும் குளத்தை வாதி அறக்கட்டளை ஏற்படுத்தியது. அது சத்திரம் புறம்போக்கு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆயிரவைசிய பாரி செட்டியார் அறக்கட்டளை டவுன் பஞ்சாயத்திற்கு வரி செலுத்தியுள்ளது. யாருடைய இடையூறும் இல்லாமல் அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது. காலி இடத்தில் தோட்டம் வைக்கப்பட்டு மேற்படி அறக்கட்டளையால் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. சிறு சிறு அறைகள் கட்டப்பட்டு சிறு தொழில் செய்பவர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டு, அவர்களிடமிருந்து வாடகை வசூல் செய்யப்படுகிறது. அறக்கட்டளையின் முக்கியமான மேற்பார்வையாளர் இறந்துவிட்டதால், சட்ட விரோதமான ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமிப்பு செய்து மோசடியான ஆவணங்கள் மூலம் அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்தை சட்ட விரோதமாக விற்பனை செய்துள்ளார்கள். மாண்புமிகு உயர் நீதிமன்றம் ச.எண்.7ல் விஸ்தீரணம் 1.16 ஏக்கர் மற்றும் அவற்றில் உள்ள கட்டிடங்கள் ஆயிர வைத்திய பாரி செட்டியார் அறக்கட்டளைக்கு சொந்தமானது என்று வாதி தாக்கல் செய்த W.P.No.924/1956என்ற மனு உத்தரவின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது. B–Memo–கள் வருவாய் துறையினரால் ரத்து செய்யப்பட்டு வாதி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனவே இம்மனவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

7. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

8. **<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இ.ம.எண்.220/2017 ல் கடந்த 06.10.2017ல் இந்த மனுதாரர் தரப்பில் ம.சா.1 சாட்சியம் அளிக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் இந்த இ.ம.எண்.221/2017 ல் எனது தரப்பில் கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்யவேண்டியது அவசியமாக உள்ளது. இ.ம.எண்.359/2015 இன் வழக்கு எண்.120/2015 என்ற மனுவில் கடந்த 16.09.2015 தேதியன்று தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.21 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இ.ம.எண்.365/2016 இன் அ.வ.எண்.120/2015 என்ற மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட 2 ஆவணங்களும் இந்த மனுவிற்கு அவசியமான ஆவணங்களாகும். மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி இருப்பதால் மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மறு திறப்பு செய்யவேண்டும் என்று மனுவில் விவரம் கூறப்படுகிறது.

9. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், வழக்கு சொத்து ஆயிரவைசிய பாரி செட்டியார் அறக்கட்டளைக்கு சொந்தமானது என்றும், 1, 2 மனுதாரர்கள் மோசடியான ஆவணத்தின் மூலம் அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்தை வாங்கியிருப்பதாக கூறி சட்ட விரோதமாக கூறி ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் எந்த வகையில் சம்மந்தமானவை என்பது குறித்து மனுதாரர் தரப்பில் விவரம் எதுவும் கூறவில்லை. வழக்கை காலம் கடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

10. இ.ம.எண்.221/2017 மனுவை தீர்வு காண்பதற்கு இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்வதற்கு, மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மறு திறப்பு செய்யவேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பினை அளிப்பது இயற்கை நீதியின்பால் அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இ.ம.எண்.221/2017ஐ தீர்வு காண்பதற்கு மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய இருக்கும் ஆவணங்கள் உதவி கரமாக இருக்கும் என்பதால், இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால், எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKAREN S — Digitally signed by BASKARAN S Date: 2025.11.06 17:22:58 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–</u> இல்லை

BASKARAN S — Digitally signed by BASKARAN S Date: 2025.11.06 17:23:07 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.